**சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.**

**நாள். 29.02.2024**

Case No.OS.253/2023

P.W.1

**திரு.குணதுரை**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணை :</u>**

1. தாவா சொத்தை சுற்றி கம்பி வேலி போட்டுள்ளதா என்றால் சரிதான்.
2. தாவா சொத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள பிரதிவாதி வீட்டின் மேற்கு பக்க சுவரோடு சேர்த்துதான் கம்பி வேலி போடப்பட்டுள்ளதா என்றால் சரிதான்.
3. கம்பி வேலி போட்டு ஒரு வருடம் இருக்கும்.
4. கம்பி வேலியை பிரதிவாதி போட்டு பிரதிவாதிகள் கிழக்குபக்கத்தோடு சேர்த்து அனுவவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.
5. தாவா சொத்தில் முருங்கை மரம், புளியமரம், கொய்யா மரம், பஞ்சு மரங்கள் உள்ளது. மேற்படி மரங்களுக்கு பிரதிவாதிகள் தான் தண்ணீர் ஊற்றுகிறார்கள் என்றால் சரியல்ல.
6. தபசில் சொத்திலிருக்கும் மரத்திற்கு தெருவிலுள்ள குடிநீர் நல்லியிலிருந்து தண்ணீர் பாய்க்கப்படுகிறது.
7. தபசில் சொத்தில் தெரு நீர் நல்லியிலிருந்து தண்ணீர் பாய்க்கப்படவில்லை, பிரதிவாதிகள் தான் தண்ணீர் பாய்க்கிறார்கள் என்றால் சரியல்ல.
8. தபசில் சொத்தில் முத்து நாடார் ஆயுட்காலத்திலே தனது மகனான தாவீது நாடாருக்கும் மகளான மரியாளுக்கும் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.
9. மேற்படி முத்து நாடாருக்கு, தாவீது, சாமுவேல், யோவான், மரியாள், தாசன், பொன்னம்மாள், இஸ்ரேல் பாண்டியன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.
10. முத்துநாடாரின் வாரிசுகள் தபசில் சொத்தினை தாவீது நாடாருக்கும் மரியாளுக்கும் கொடுத்ததை ஏற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.
11. ஏனைய முத்துநாடாரின் வாரிசுகள் தபசில் சொத்தினை தாவீது நாடாருக்கும் மரியாளுக்கும் கொடுக்கவில்லை என்று சாட்சியம் அளிப்பார்களா என்றால் அந்த விபரம் எனக்குத்தெரியாது.

12. மரியாளுக்கு 1வது பிரதிவாதி ஜான் ஜெபசிங், பொன்ராஜ் தனசிங், 2வது வாதி செல்வி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.

13. மேற்படி தாவீதுக்கு கோயில்ராஜ் , 2வது பிரதிவாதி டெய்சி அன்னபுஷ்மமும் வாரிசுகள் என்றால் சரிதான்.

14. பிரதிவாதிகளுக்கு 1977 ல் திருமணமானது என்றால் சரிதான்.

15. மேற்படி திருமணமான காலம் முதலே பிராது தபசில் சொத்தினை மரியாளின் வாரிசான 1வது பிரதிவாதியும் தாவீது நாடாரின் வாரிசான 2வது பிரதிவாதியும் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

16. தபசில் சொத்திலிருந்த உடைமரங்களை பிரதிவாதிகள் வெட்டியும் தோட்டமாக வைத்தும் பிரதிவாதிகள் 1977 லிருந்து அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

17. எனக்கு 28 பவுன் நகைபோட்டு 25.05.1987 1வது பிரதிவாதியும் அவரது சகோதரர்களும், தாய் தந்தையரும திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல 15 பவுண் நகைபோட்டு திருமணம் செய்து கொடுத்தார்கள்.

18. திருமணத்தின் போது சென்னையிலும் , 1995 ஏரல் காவல்நிலையத்திலும், அதன்பின் ஆத்தூர், சாயர்புரம் ஆகியே காவல்நிலையங்களில் பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான்.

19. நான் 2012 ல் விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன்.

20. நான் விருப்ப ஓய்வு பெற்ற பின்பு, கடந்த 10 ஆண்டுகளாகத் தான் பண்ணைவிளையில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல.2009 ம் ஆண்டிலிருந்து பண்ணைவிளையில் குடியிருந்து வருகிறேன்.

21. பண்ணைவிளையில் தனியாக சொத்தை என்னுடைய மனைவி பெயரில் கிரையம் வாங்கி வீடு கட்டி குடியிருந்து வருகிறேன்.

22. தாவா சொத்தானது பொதுச்சொத்து என்பதால் தனியாக பண்ணைவிளையில் கிரையம் வாங்கி குடியிருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

23. தாவா சொத்தானது 2 வது வாதிக்கு கிரையம் மூலமாக பாத்தியமா அல்லது எந்த ஆவணத்தில் அடிப்படையில் உரிமை ஏற்பட்டது என்றோ பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றோ பிராதில் சொல்லவில்லை என்றால் நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் மூலம் பாத்தியப்பட்டது என்று பிராதில் சொல்லியுள்ளேன்.

24. நான் ஓய்வு பெற்ற காவல் உதவி ஆய்வாளர் என்பதால் கிராம நிர்வாக அலுவலரை சரிகட்டி 2 வது வாதியின் பெயரை நத்தம் நிலவரித்திட்ட அடங்கல் பதிவேட்டில் சான்று வாங்கி மோசடியாக 13.05.2020 தான செட்டில்மன்ட் ஆவணம் பிறப்பித்துக்கொண்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

25. அதனால் 2 வது வாதி எனக்கு எழுதிக்கொடுத்த 13.05.2020 தேதியிட்ட தான செட்டில்மன்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

26. தாவீது நாடார் அவருக்குரிய தபசில் சொத்தின் பாகத்தினை அவருடைய 2 வது பிரதிவாதிக்கு ஒப்படைத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

27. மரியாள் பிராது தபசில் சொத்தினை அவரது வாரிசுகளான 1 வது பிரதிவாதி பொன்ராஜ் தனசிங், 2 வது வாதி ஆகியோர்கள் 2 வது பிரதிவாதியோடு சேர்ந்து கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல-

28. பிராது தபசில் சொத்து 2 வது வாதிக்கு எந்தவிதமான தனித்த உரிமையும் அனுபவமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

29. தாவா சொத்தில் இருந்த வீடு 30 வருடங்களுக்கு முன்பு இடிந்து விட்டது என்று சொன்னால் சரியல்ல.

30. பிராது தபசில் சொத்தில் எந்த காலத்திலும் வீடு இருந்தது கிடையாது.

31. எந்த காலத்திலும் வீடு இருந்தது கிடையாது என்று எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொல்கிறீர்கள் என்றால் அது காலிமனை முற்றமாக இருந்தது. மேற்படி காலிமனை முற்றமாக இருந்தது திருமணமான பின்பு தான் எனக்குத்தெரியும்.

32. திருமணத்திற்கு முன்பு எவ்வாறு இருந்தது என்ற விபரம் எனக்குத்தெரியாது.

33. பிராது தபசில் சொத்திற்கு கிழக்கு மற்றும் தெற்கு பக்கம் உள்ள சொத்துக்களுக்கும் பதிவு செய்யப்பட்ட 03.04.1963.27.12.1972 .23.05.1980.11.03.2011 ஆகிய ஆவணங்களில் எல்கை மால்களாக தபசில் சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

34. தாவா சொத்துக்கு தெற்கு பக்கம் முத்து நாடார் மகன் தாசன், யோவான் ஆகியோர்களுக்கு சொத்து உள்ளது.

35. தாவா சொத்துக்கு மேற்கு பக்கம் தெரு உள்ளது.

36. தாவா சொத்துக்கு வடக்கு பக்கம் யோவான் நாடார் சொத்து உள்ளது.

37. பிராது தபசில் சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள சொத்தினை யோவான் நாடார் அவரது சகோதரர் தாவீது நாடாருக்கும் சகோதரி மரியாளுக்கும் 27.12.1972 ல் நன்கொடை ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்று சொன்னால் மரியாள் அம்மாளுக்கும் அவரது கணவர் பேதுரு நாடாருக்கும் எழுதிக்கொடுத்துவிட்டார்.

38. நான் சொல்வது போல் மரியாள் அம்மாளுக்கும் அவரது கணவர் பேதுரு நாடாருக்கும் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.,

39. மேற்படி மரியாள் அம்மாள் 23.05.1980 ல் பிராது தபசில் சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள தனது கணவர் பேதுரு நாடாருக்கு தான செட்டில்மன்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

40. பிராது தபசில் சொத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள சொத்தை முத்துநாடார் அவரது மகள் மரியாளுக்கு கிரையம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

41. பிராது தபசில் சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள சொத்தை ஜான் ஜெபமணி என்ற யோவான் தனது பேரன் ஜெனிசனுக்கு 11.03.2011 ல் ஏற்பாடு ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரிதான்.

42. 13.05.2020 தேதியில் எனது மனைவி 2வது வாதி எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் சம்பந்தமாக 1வது பிரதிவாதி ஏரல் வட்டாட்சியருக்கு போலி ஆவணம் மூலம் ஏற்படுத்தப்பட்டது என்று ஒரு மனு கொடுத்தார் என்றால் சரிதான்.

43. மேற்படி மனுவின் மீது ஏரல் மண்டல துணை வட்டாட்சியர் விசாரணை செய்து ஆவணங்களை சரிபார்த்து பெருங்குளம் கிராம நத்த அடங்கல் கணக்கில் 1375/26 காலி மனை என்று இருந்தது என்றும் பெருங்குளம் கிராம நிர்வாக அலுவலர் அறியாமையால் எந்தவித முன் ஆவணப்படியோ முழு அனுபவப்படியோ பாத்தியம் அல்லாத நபருக்கு அனுபவ சான்று வழுங்கப்பட்டுள்ளதாக அறிக்கை தயார் செய்து 17.08.2020 ல் பெருங்குளம் சார்பதிவாளருக்கு கடிதம் எழுதினார் என்றால் சரியல்ல.

44. மேற்படி கடிதத்தின் படி வேறு எந்தவித பத்திரப்பதிவும் செய்ய வேண்டாம் என்று குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

45. நான் மோசடியான ஆவணத்தை தயார் செய்து 13.05.2020 தேதியல் உருவாக்கப்பட்ட ஏற்பாடு ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

46. 2 வது வாதிக்கு எவ்வித உரிமையின் அடிப்படையிலும் 13.05.2020 ல் உங்களுக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

47. தாவா சொத்தை விற்பணை செய்ய நடவடிக்கை எடுத்ததால் பிரதிவாதிகள் 03.06.2020 ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல.

48. பிரதிவாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு 06.06.202 ல் பதிலறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான்.

49. மேற்படி 06.06.2020 லும் 23.06.2020 ல் அனுப்பியுள்ள பதிலறிவுப்புகள் பொய்யன சாற்றுரைகளோடு அனுப்பியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

50. தாவா வழக்கிற்கு 1 வது பிரதிவாதி 2 வது வாதியின் சகோதரர் பொன்ராஜ் தனசிங் தேவையான தரப்பினர் என்றால் சரியல்ல.

51. மேற்படி பொன்ராஜ் தனசிங் தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படாததால் தாவா வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

52. பிராது தபசில் சொத்தைப்பொறுத்து 2 வது வாதி எனக்கு எழுதிக்கொடுத்துள்ள 13.05.2020 ஆவண எண்.290/2020 ஏற்பாடு ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று பிரதிவாதிகள் கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் பிரதிவாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

53. வாதி கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

54. பிரதிவாதிகள் கோரியுள்ள எதிரிடை கோரிக்கையின் படி வழக்கு பிரதிவாதிகளுக்கு செலவுத்தொகையோடு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-கே.நம்பிராஜன்
**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்**